**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண்.120/2021**

**Deposition of witness of Defendant – D.W.1 (வெள்ளைச்சாமி)**

**04.03.2025**

**பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சி வெள்ளைச்சாமி என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

**7 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு நான் தான் விவரம் சொன்னேன். தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனார் யார் யாருக்கு என்னென்ன வில்லங்கள் ஏற்படுத்தியுள்ளார் என்று தெரியுமா என்றால் நிலவள வங்கியில் கடன் வாங்கியுள்ளார். நிலவள வங்கியில் எப்போது எவ்வளவு கடன் வாங்கினார் என்றால் 1969 இல் ரூ.12,000/– கடன் வாங்கியுள்ளார்.

2. அந்த கடன் தொகை அரசால் தடைசெய்யப்பட்டது என்றால் சரிதான். கடன் செலுத்தியதுபோக மீதமிருந்த தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த தள்ளுபடி எப்போது செய்யப்பட்டது என்றால் 1980–1982 ஆம் வருடத்தில் இருக்கும். 1982 ஆம் வருடத்தில் நிலவள வங்கியின் கடன் முழுவதும் முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. அவ்வாறு கடன் தொகை செலுத்தப்பட்டதற்கான இரசீது தாக்கல் செயதுள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனது மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. தாவா 3 வது அயிட்ட சொத்தை எனது மனைவியான 7 ஆம் பிரதிவாதிக்கு எவ்வளவு தொகைக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் ரூ.2,00,000/–ற்கு கிரையம் கொடுத்தேன்.

5. எனது தகப்பனார் யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கியிருந்தார், அதில் எவ்வளவு தொகையை நான் திருப்பி செலுத்தியுள்ளேன் என்றால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. 7 ஆம் பிரதிவாதி சீதான சொத்தாக தாவா 3 வது அயிட்ட சொத்தை வாங்கியுள்ளார் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சீதனமாக வந்த பணத்தை வைத்து வாங்கியுள்ளார். எனது மனைவிக்கு சீதனமாக எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்றால் ரூ.2,00,000/– கொடுத்தார்கள்.

6. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனார் மூக்கன் அம்பலத்தால் சுயமாக தேடப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக எனது மனைவி பெயரில் மறுபயன் இல்லாமல் கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

7. கூட்டுறவு நிலவள வங்கியில் நான் எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும், அவ்வாறு செலுத்தியிருந்தால் அதற்கான இரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

8. வெளிநபர்களிடம் எனது தகப்பனார் கடன் வாங்கியிருந்தால் அந்த நபர்களின் பெயரை எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் 2 வது மனைவியின் வாரிசுகள் தான் வழக்கு வாதிகள் என்றால் சரிதான்.

9. வாதிகள் எனது தகப்பனாரின் 2 வது மனைவியின் வாரிசுகள் என்பதால் அவர்களுக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்ற அடிப்படையில் வில்லங்கம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

10. தாவா சொத்துக்கள் முழுவதும் எனது தகப்பனாரின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்பதால் வாதிகளுக்கு சமபாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

**திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**